பக்கங்கள்:-30

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 01 | திங்கட்கிழமை | 15.01.2024 | அதிர்வு 167 |
|---|---|---|---|---|---|




### நியாயமான தீர்வைத் தராமல்

# இவ்வருடமும் ஏமாற்றினால் வேறு விளைவுகள் ஏற்படும்!

## பொங்கல் செய்தியில் சம்பந்தன் அழுத்தம்




– சீ.ஏ. தமிழ்மாறன் –

"தமிழ்பேசும் மக்கள் தமது தாயகமான வடக்கு - கிழக்கில் சுதந்திரமாக வாழும் வகையில் நியாயமான - நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அதாவது தமிழர்களின் தலைவிதியை அவர்களே நிர்ணயிக்கக்கூடிய நிலைமை வடக்கு - கிழக்கில் ஏற்பட வேண்டும். எனவே, இந்த வருடத் தைப்பொங்கல் தமிழர்களுக்கு அதிமுக்கியமான பொங்கல். இந்த வருடமும் இலங்கை அரசு எம்மை ஏமாற்றினால் விளைவுகள் வேறு விதமாக அமையலாம்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

06▶

# தமிழருக்கான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவரே விஜயகாந்த்




## அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்திய சாணக்கியன் தெரிவிப்பு

"தமிழ் ஈழப் போராட்டத்துக்கு மிக முக்கிய ஆதரவு வழங்கியவர்களில் மிக முக்கியமான ஒருவர் புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்த். எமக்கான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார.

தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள சாணக்கியன் எம்.பி., அண்மையில் காலமான புரட்சிக் கலைஞர் விஜயகாந்தின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள சென்னை கோயம்பேடு பகுதியில் இருக்கும் அவரது கட்சி அலுவலகத்துக்கு நேரில் சென்று வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் சார்பாக அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எம் மக்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்ட மனிதரே புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்த்.

1980 மற்றும் 1990

06▶

# தேசிய பொங்கலை மலையகத்தில் நடத்த அரசுக்கு அருகதை இல்லை

## வேலுகுமார் எம்.பி. கடும் சீற்றம்




"மலையகத்தில் தேசிய பொங்கல் விழாவை நடத்துவதற்கு இந்த அரசுக்கு எவ்வித அருகதையும் கிடையாது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

06▶




அவர் ஒரு மூத்த ஊடகவியலாளர். தமிழர். எழுபதுகளில் தமிழ் ஊடகத் துறையில் இணைந்தவர். பிற்காலத்தில் ஆங்கில ஊடகத்துறையில் – பத்திரிகையில் – அதுவும் நீதிமன்ற செய்திகள் வரைவதில் கொடிகட்டிப் பறந்தவர்.

எழுபதுகளின் கடைசியில் பேனாவும் கையுமாக நான் பத்திரிகை துறைக்குள் புகுந்த போது நான் சேர்ந்த அந்தக் கொழும்புப் பத்திரிகையில் அவர்

06▶



# பௌத்தம் குறித்துத் தவறான சித்தாந்தங்களை பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்!

## மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

பௌத்த மதம் தொடர்பாக தவறான சித்தாந்தங்களைப் பரப்பி, பௌத்த தத்துவத்திற்கு தீங்கு விளைவிப்பதாகக் கூறுப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கையின் மூன்று பௌத்த பீடங்களின் பிரதான பீடாதிபதிகள் (மகாநாயக்க தேரர்கள்) ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பௌத்த மதத்தை அழிக்க முற்படும் இவ்வாறான நபர்களின் செயற்பாடுகளை வெறும் சம்பவங்களாகக் கருத முடியாது என்பது நிரூபணமாகியுள்ளதாக ஜனாதிபதிக்கு அனுப் பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதத்தின் உன்னத சித்தாந்தத்தை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நிகழ்வுகளை தடுப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை தயார் செய்ய வேண்டிய தருணம் இதுவாகும்.

மேலும், சமூக ஊடகங்களில் இவ்வாறான கருத்துக்களை பரப்பி, பௌத்த சமூகத்தை தவறாக வழிநடத்தி, சமூக சீர்கேட்டை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாக தயாரிக்க வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்படி, இந்த விடயம் தொடர்பில் 'புத்தசாசனத்தின் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கு" உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதியிடம் மகாநாயக்க தேரர்கள் கோரியுள்ளனர்.



# ஓய்வு பெறுகின்றார் படைக்கல சேவிதர்

நாடாளுமன்றத்தில் படைக்கல சேவிதராக கடமையாற்றிவரும் நரேந்திர பெர்னாண்டோ எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளார்.

2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி முதல் நாடாளுமன்றத்தில் படைக்கல சேவிதராக கடமையாற்றி வரும் அவர் நாடாளுமன்றத்தில் 42 வருட சேவை காலத்தை நிறைவு செய்யவுள்ளார்.

அவர் ஓய்வுபெறவுள்ளதன் காரணமாக, அவரது சேவையை பாராட்டி நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி பாராட்டு நிகழ்வொன்றும் நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் படைக்கல சேவிதர் ஆகியோருக்கு மாத்திரமே இவ்வாறான பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

# விஜயகாந்தின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்குச் சென்று சாணக்கியன் அஞ்சலி!




தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள இரா.சாணக்கியன் எம்.பி., அண்மையில் காலமான புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்தின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள சென்னை கோயம்பேடு பகுதியில் இருக்கும் அவரது கட்சி அலுவலகத்துக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.











# கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தின் நிர்வாகத்தை மாற்றுவதற்குத் திட்டம்

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தகவல்



எதிர்காலத்தில் கந்தகாடு புனர்வாழ்வு நிலைய நிர்வாகத்தை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படுவதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளை கருத்தில் கொண்டு இந்த மாற்றத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்பிரகாரம், கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விரிவான அறிக்கை கிடைத்ததும் அது குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட மோதலில் 24 கைதிகள் காயமடைந்துள்ளனர்.

# பரீட்சை வினாத்தாள் கசிவு: அம்பாறை ஆசிரியர் கைது




க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான விவசாய விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியான சம்பவம் தொடர்பில் அம்பாறையைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறையைச் சேர்ந்த ஆண் ஆசிரியர் ஒருவரே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இம்மாதம் 26 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் பகுதிக்கான வினாத்தாள் மும்மொழிகளிலும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இரத்து செய்யப்பட்டுள்ள விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத்தாளுக்கான, மீள் பரீட்சையை விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, மீள் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# லசந்த, தாஜுதீனைக் கொலை செய்தவர்களை தமக்குத் தெரியும் என்கின்றார் மேர்வின் சில்வா

ஊடகவியலாளர் லசந்த விக்கிரம துங்க மற்றும் ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் ஆகியோரைக் கொலை செய்தவர்கள் யார் என்பது தனக்குத் தெரியும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

உரிய நேரம் வரும் போது இந்த விடயங்களைப் பகிரங்கப்படுத்துவேன் எனவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சிரச தொலைக்காட்சி வலையமைப்பு மீதான தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது தமக்குத் தெரியும் என்றும் கூறியுள்ளார்.

“தி சண்டே லீடர்” பத்திரிகை மற்றும் லீடர் பப்ளிகேஷன்ஸின் ஸ்தாபகரான லசந்த விக்கிரமதுங்க, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

அத்துடன், அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுடன் சட்டப் போரில் ஈடுபட்டிருந்தார். இந்நிலையில், 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேபோல், பிரபல றக்பி வீரர் தாஜுதீன் கார் விபத்தில் உயிரிழந்தார். இது



முதலில் விபத்து என்று கூறப்பட்டது, எனினும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அது கொலையெனத் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வீட்டுக் கடன்களை வழங்கும் பணி ஆரம்பம்




“அனைவருக்கும் வீடு” என்ற திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் புதிய வீட்டுக் கடன்கள் வழங்கும் பணிகள் இந்த மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடு திருத்தப் பணிகளுக்காக இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படும் என அதன் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக பயனாளிகளுக்கு இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதுபானசாலைகளுக்கு பூட்டு!



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று வடக்கு மாகாணத்திலும் நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களிலும் உள்ள மதுபானசாலைகளை மூடுவதற்கு மதுவரித்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்திலும் பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை, ரிதிமாலியத்தை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து மதுபானசாலைகளும் இன்று மூடப்படவுள்ளன.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இன்று மூடப்படவுள்ளன.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு சீனியர். அவர் உதவி ஆசிரியர். நான் பயிற்சிச் செய்தியாளன்.

அந்த நேரத்தில் ரோய்ட்டர், பி.ரி.ஐ. போன்ற செய்தி நிறுவனங்களின் டெலிப் பிரண்டரில் வரும் செய்திகளை கோவை யாக்கி, உலகச் செய்திகளை வரைவது அவரது பொறுப்பு. சில செய்திகளை என்னிடமும் தருவார். ஆங்கிலத்தில் இருந்து தமிழாக்கம் செய்யும் பயிற்சி. அது ஒன்றும் எனக்குரிய வேலை அல்ல. என்னை அத்துறையில் பயிற்றுவிப்பது அவரது பொறுப்பும் அல்ல. எனினும் இளைஞனான என்னுடைய இயல்பான ஈடுபாட்டைக் கண்டு, தாமாகவே அரவ ணைத்து, எனக்குப் பயிற்றுவித்தார் – எந் தப் பிரதியுபகாரமும் எதிர்பார்க்காமல்.

அடுத்த ஆண்டில் சட்டக் கல்லூரி அனு மதிப் பரீட்சையில் பல்லாயிரம் பேருடன் போட்டியிட்டு, நூற்றியைம்பது பேரில் ஒரு வனாக அனுமதி பெறும் தகுதியை நான் ஈட்டுவதற்கு அந்த மொழிபெயர்ப்பு பயிற்சி தான் எனக்கு உரிய வாண்மையைப் பெற்று தந்தது என்பேன்.

எழுதும் செய்தியில் தகவல் பிழை இல்லாமல் கனகச்சிதமாக இருக்க வேண்டும் என்பதில் அவர் பெரும் கறார் பேர்வழி. பிழை, தவறு என்பவற்றை நெற்றிப்பொட்டில் ஆணி அடித்தால் போல நேரடியாகச் சுட்டிக்காட்டிக் கூறு வார்.

சில தினங்களுக்கு முன்னர் திடீரென அழைப்பு எடுத்தார்.

"நீங்கள் ஓரளவு சட்டம் தெரிந்த பத்தி ரிகையாளர்தானே? சட்டம் படித்தவர் தானே?" – என்று கேள்வி எழுப்பினார்.

நான் சிரித்துச் சமாளித்தேன். பத்திரி கையில் ஏதோ தவறு நடந்து விட்டது, அவ ரின் கண்ணில் அது பட்டுவிட்டது என்பதை மட்டும் ஊகித்துக் கொண்டேன்.

"சில தினங்களுக்கு முன்னர் ஒரு செய்தி வெளியிட்டீர்கள். 'வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி வழக்கு; 3 எம்.பிக்கள் உட்பட எழுவரை விடுவித்தது நீதிமன்றம்' என்ற தலைப்பில் ஒரு முன் பக்க செய்தி வெளியாகி இருந்தது" என்றார் அவர்.

"ஆமாம் கடந்த 8 ஆம் திகதி மாலை முரசில் வெளியிட்டிருந்தோம்." – என் றேன்.

"முன்னுக்குப் பின் முரணாக செய்தி வெளியிட்டிருக்கின்றீர்கள்" – என்றார் அவர்.

எனக்கு புரியவில்லை. அவரே தெளிவு படுத்தினார்.

"இரண்டு வழக்குகள் குறித்து செய்தி கள் வெளியிட்டுள்ளீர்கள். இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு பிரதி வாதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரினார் என்றும், இதனை அடுத்து இரண்டு வழக் குகளையும் கிடப்பில் போட உத்தரவிட்ட நீதிமன்றம், பிரதிவாதிகள் அனை வரையும் விடுதலை செய்து பணித்தது என்றும் செய்தி வரைந்து உள்ளீர்கள். அது தப்பு. வழக்கு கிடப்பில் போடப்பட்டால் அதன் பிரதிவாதிகளின் பெயரும் கிடப் பில் இருக்கும். அவர்கள் விடுவிக்கப் பட்டு விட்டார்கள் என்று அர்த்தம் அல்ல. வழக்கு மீண்டும் பரிசீலனைக்கு எடுக்கப்படும் போது பிரதிவாதிகளும் வழக்குக்கு வர வேண்டியிருக்கும். வழக் கின் பிரதிவாதிகள் அனைவரும் விடுவிக் கப்பட்டிருந்தால் வழக்கு கிடப்பில் இராது. வழக்கு முடிந்து விட்டதாக இருக் கும். இப்போது வழக்குக் கிடப்பில் போடப் பட்டிருப்பதால் அது மீண்டும் விசார ணைக்கு எடுக்கப்படாத வரையில் பிரதி வாதிகள் வழக்குக்கு வர வேண்டிய தேவை இல்லை. அதுதான் அர்த்தம். அது விடுதலை என்று அர்த்தம் அல்ல. அவ்வளவுதான். வழக்கை நடத்திய சட்டத் தரணிகளுக்கு ஒரு 'பூஸ்ட்' கொடுப் பதற்காக அவர்கள் தரப்பு அப்படி நீதி மன்ற உத்தரவுக்கு அபத்தமான அர்த் தத்தைக் கற்பித்து செய்திகளைத் தந்தி ருக்கக் கூடும். ஆனால், நீங்கள் சட்டம் தெரிந்த–புரிந்த–ஆசிரியர்.அத்தகையதவ றுக்கு அனுமதித்திருக்கக் கூடாது." – என்றார் எனது பழைய குரு. அவர் சொன்னவை முற்றிலும் சரி. தவறு என் பக்கத்தில்தான்.

1979ஆம் ஆண்டு அவருக்கு முன் னால் பவ்யமாக நின்று, ஆங்கிலச் செய் தியை மொழிபெயர்ப்பது குறித்துக் கேட் டுப் படித்த அதே பணிவுடன், இப்போதைய அவரின் கருத்தையும் உள்வாங்கிக் கொண்டேன். தவறை ஒப்புக் கொண்டு ஏற்றுத் திருந்துபவன்தானே மனிதன்...!

## இவ் வருடமும் ஏமாற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு எனது இனிய தைத்திருநாள் நல்வாழ்த் துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு நியாயமான – நிரந்தர அரசி யல் தீர்வு எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இந்த நன்னாளில் பிரார்த்தனை செய்கின்றேன்.

இலங்கையில் நீண்ட காலமாகத் தேசிய இனப்பிரச்சினை தொடர்கின்றது. இன்னமும் அரசியல் தீர்வு காணப்பட வில்லை. இந்த நாட்டில் பெரும்பான்மை இனமாக வாழும் சிங்கள மக்களுக் கும் சிறுபான்மை இனமாக வாழும் தமிழ்பேசும் மக்களுக்கும் இடையில் அரசியல் சாசனம் ரீதியாக எந்தவொரு இணக்கப்பாடும் ஏற்படவில்லை. இது சம்பந்தமாகக் கடந்த காலங்களில் பல பேச்சுவார்த்தைகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடைபெற்றன. அந்தப் பேச்சுகளுக்குத் தமிழ்த் தரப்பினர் தம் மாலான ஒத்துழைப்புக்களை வழங்கி னர். ஆனால், இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசுகள் தீர்வை வழங்க முன்வர வில்லை. இந்த நிலைமை இனியும் தொடர இடமளிக்க முடியாது.

தமிழ்பேசும் மக்கள் எதிர்பார்ப்பது, தாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய உரி மையின் அடிப்படையில் – தங்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் – அதியுச்ச அதிகாரப் பகிர் வின் அடிப்படையில் – எமது தமிழ்த் தாய கமான வடக்கு – கிழக்கில் சுதந்திரமாக வாழும் வகையில் தீர்வு காணப்பட வேண் டும். அதாவது அவர்களுடைய தலைவி தியை அவர்களே நிர்ணயிக்கக்கூடிய நிலைமை வடக்கு – கிழக்கில் ஏற்பட வேண்டும்.

ஆனபடியால் இந்த வருடத் தைப்பொங் கல் தமிழர்களுக்கு அதிமுக்கியமான பொங்கல். இந்த வருடமும் இலங்கை அரசு எம்மை ஏமாற்றினால் விளைவுகள் வேறு விதமாக அமையலாம். நாம் நீண் டகாலமாக ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். இனியும் ஏமாற முடியாது. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நியாயமான அரசியல் தீர்வு வேண்டும். உள்ளக சுயநிர்ணய உரி மையின் அடிப்படையில் அதியுச்ச அதிகா ரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். தமிழர்களின் அபிலாஷைகளை நிறை வேற்றக்கூடிய வகையில் அந்தத் தீர்வு காணப்பட வேண்டும்." – என்றார்.

## தமிழருக்கான உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டு காலப் பகுதியில் தமிழ் ஈழப் போராட்டத்துக்கு மிக முக்கிய ஆதரவு வழங்கியவர்களில் மிக முக்கியமான ஒருவர் இவரே.

எமக்கான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதில் இவர் உறுதியாக இருந்தார். இவரது ஆன்மா சாந்திய டைய வேண்டுமெனில் இவரது ஆதரவா ளர்கள் ஈழத் தமிழர்களுடன் மற்றும் ஈழத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களுடன் இணைந்து உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்." – என்றார்.

## தேசிய பொங்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:–

"நாட்டின் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. இந்தப் பொரு ளாதார நெருக்கடியில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பது பெருந்தோட்ட தொழி லாளர்கள் ஆகும்.

விலைவாசிகளின் அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவின் உயர்வு அவர்க ளைச் செய்வதறியாத நிலைக்கு தள்ளிவிட் டிருக்கின்றது. சம்பள உயர்வுக்கான எவ்வித அறிகுறியும் தென்படுவதாக இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் மலை யகத்தில் தேசிய பொங்கல் விழா நடத்து வதற்கு அரசுக்கு அருகதை இல்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூலி, இறுதியாக இரண்டாயிரத்து இருபத் தோராம் (2021) ஆண்டில் நாளொன் றுக்கு ரூபா ஆயிரம் எனத் தீர்மானிக் கப்பட்டது. தற்போது முடிவடைந்த காலத் தில் விலைவாசிகள் மும்மடங்காக அதி கரித்து இருக்கின்றது. இவ்வருடம் அரசு கொண்டு வந்த வட் வரியுடன் எஞ்சி யிருந்த பொருள்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

கோதுமை மா ஒரு கிலோ கிராம் ரூபா 100 இற்கு விற்கப்பட்டது, இன்று 320 ரூபாவாக உள்ளது. மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் ரூபா 87 இற்கு இருந்தது, இன்று ரூபா 240 ஆக உள்ளது. தைத் திருநாள் வருகின்றதெனத் தெரிந்திருந் தும் நேற்று வரை ஒரு லீற்றர் பால் 160 ரூபாவுக்கு விற்கப்பட்டது. இன்று ரூபா 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், தொழிலாளரின் நாள் கூலி அன்றிருந்த அதே ரூபா ஆயிரமாக உள்ளது.

இன்றுள்ள விலைவாசியில் பொங்க லொன்றை வைப்பதற்குக் குறைந்தபட் சம் 3 ஆயிரம் ரூபாவுக்கு மேல் தேவை. அதாவது ஒரு தொழிலாளர் மூன்று நாட்களுக்கு மேல் வேலை செய்து பெறு கின்ற கூலியாகும். இந்தச் சூழலில் தாய் மார்களின் வயிறு பற்றி எரிந்து கொண்டு இருக்கின்றது.

ஆட்சியாளர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் விறகு வைத்து, தீ மூட்டி பொங் கல் பொங்கத் தேவையில்லை. தாய்மார்க ளின் வயிற்றில் இருந்து பற்றி எரியும் நெருப்பிலேயே பொங்கல் பொங்கி விட லாம். மக்கள் இவ்வாறு திண்டாடும்போது, கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்ய வெட்கம் இல்லையா எனத்தான் கேட்க வேண்டியுள்ளது. எங்கள் மக்களுக்கு உண்மையான பொங்கல் பிறப்பது சம் பளம் அதிகரிக்கும் நாளிலேயே. கொண் டாட்டத்தை விட்டு சம்பள அதிகரிப் புக்கு வழிசெய்யுங்கள்." – என்றார்.




# இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு இலவசமாக 20 ரயில் எஞ்சின்கள்!

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இலவசமாக வழங்கப்படும் 20 ரயில் எஞ்சின்களில் 02 எஞ்சின்கள் எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி எஞ்சின்கள் இலங்கையில் இயங்குவதற்கு ஏற்றவையா என ஆராயவே இவ்வாறு கொண்டுவரப்படவுள்ளன என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ரயில் எஞ்சின்களை ஆய்வு செய்வதற்காக இலங்கை ரயில்வே திணைக்களத்தை சேர்ந்த 05 பரிசோதகர்கள் இந்தியாவிற்கு சென்றிருந்தனர்.

நாட்டின் வடக்கு ரயில்வே மார்க்கத்தில் சரக்கு போக்குவரத்திற்கு இந்த எஞ்சின்கள் பயன்படுத்தப்படவுள்ளன என கூறப்படுகிறது.

# விவசாய விஞ்ஞான மீள் பரீட்சை பெப்ரவரி முதலாம் திகதி நடக்கும்




உயர்தரப் பரீட்சையில் விவசாய விஞ்ஞானப் பிரிவின் இரண்டாம் பகுதிக்கான விசேட பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி காலை 8.30 மணி முதல் 11.40 மணி வரை நடத்தப்படுமென இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் இரத்து செய்யப்பட்ட விவசாய விஞ்ஞானப் பிரிவின் இரண்டாம் பகுதிக்கு பதிலாக இந்த சிறப்பு பரீட்சை நடைபெறுகிறது.

இதன்படி, இம்மாதம் 31 ஆம் திகதி முடியவிருந்த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி முதலாம் திகதி நிறைவடையும் எனவும் அன்றைய தினம் அனைத்துப் பரீட்சைநிலையங்களும்வழமைபோன்று செயற்படும் என்றும் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழரின் பெருமை

இன்று தைத்திங்கள் முதல் நாள். தைப் பொங்கல் பண்டிகைத் தினம்.

தமிழர்களின் பெருநாள். உழவர் திரு நாளும் கூட.

உலக இயக்கத்துக்குக் காரணமான உதயனுக்கு உலகத்தவர்கள் நன்றி கூறும் நன்னாள்.

'அவனின்றி அணுவும் அசையாது' என்பர். இந்த அவனி அசைவது சூரியனால். அவனே சக்தியின் மூலம். உலகம் ஒழுங்கு முறையாக இயங்குவது அவனால்தான்.

அவன் ஒளி வடிவில் உலகுக்குப் பாய்ச்சும் சக்தியை உலகில் பதிப்பவை தாவரங்கள். உலகை இயக்கும் உணவுச் சங்கிலியின் மூல மையம் சூரியன்தான்.

சூரியன் வாரி வழங்கும் சக்தியை தாவரங்கள் ஒளித் தொகுப்பாக உலகில் பதிக்கின்றன. அதனை விளைச்சலாக பெறும் மனிதன் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கத் தேர்ந்த நாளே பொங்கல்.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயனை நுகரத் தொடங்கும் பருவமே தை மாதம். அதன் முதல் நாளில் சூரியனுக்கு நன்றி கூறும் நாளாகத் தைப்பொங்கலைத் தேர்ந்தான் தமிழன்.

வான சாஸ்திரத்திலும் இது ஒரு முக்கிய புள்ளி. சூரியன் வடக்கு நோக்கிய தனது பயணத்தை ஆரம்பிக்கும் உத்திராயண காலமான தை முதல் நாளே பொங்கல் திருநாளாக அமைகின்றது.

நம்மூதாதையர்கள்-தமிழர்கள்-காலத்தை வகுத்த விதம் பிரம்மிப்பானது. தமிழர்கள் இயற்கையை ஆதாரமாகக் கொண்டு காலத்தைப் பிரித்தார்கள். ஒரு நாளைக் கூட ஆறு சிறு பொழுதுகளாக பிரித்து வைத்திருந்தார்கள்.

வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று அவற்றை அழைத்தார்கள். அது மட்டுமல்ல, அந்த ஆறு சிறு பொழுதுகளின் தொகுப்பையும் அறுபது நாழிகைகளாகப் பகுத்துக் கணக்கிட்டார்கள். அதாவது ஒரு நாளில் ஆறு சிறுபொழுதுகள் உள்ளன.

அந்த ஆறு சிறு பொழுதுகள் கழிவதற்கு அறுபது நாழிகைகள் எடுக்கின்றன என்று தமிழர்கள் பண்டைக் காலத்தில் கணக்கிட்டார்கள். ஒரு நாழிகை என்பது தற்போதைய 24 நிமிடங்களைக் கொண்டதாகும்.

அதாவது பண்டைக் காலத் தமிழர்களது ஒரு நாள் பொழுதின் அறுபது நாழிகைகள் என்பது தற்போதைய கணக்கீடான 1440 நிமிடங்களோடு, அதாவது 24 மணிநேரத்தோடு அச்சாகப் பொருந்துகின்றது.

தமிழர்கள் ஒரு நாள் பொழுதை, தற்போதைய நவீன காலத்தையும் விட, அன்றே மிக நுட்பமாகக் கணித்து வைத்திருந்தார்கள் என்பதே உண்மையுமாகும்.

ஒரு நாளை மாத்திரமல்ல, தமக்குரிய ஆண்டை, அந்த ஆண்டுக்குரிய தமது வாழ்வை, ஆறு பருவங்களாகவும் அவர்கள் வகுத்திருந்தார்கள்.

இளவேனில் (தை, மாசி), முதுவேனில் (பங்குனி, சித்திரை), கார்(வைகாசி, ஆனி), கூதிர்(ஆடி, ஆவணி), முன்பனி (புரட்டாசி - ஐப்பசி), பின்பனி (கார்த்திகை - மார்கழி) என்பவை அவை.

இந்த மாதக்கணக்கில் இளவேனில் என்பது சித்திரை-வைகாசி மாதங்களுக்கு உரிய காலம் எனச் சிலர் வாதிடுகிறார்கள். ஆனால் அது முற்றிலும் தவறு என்கின்றனர் அறிஞர்கள். சித்திரை மாதத்தில் (வேனில்) வெயில் தன் அதிகபட்ச உக்கிரத்தை அடைவதால் அதை முதுவேனில் என்றும் தைமாதத்தில் தொடங்கும் வெயிலை 'இளவேனில்' எனவும் பண்டைத் தமிழர்கள் அழகாகப் பகுத்திருந்தார்கள்.

காலத்தை, அறுபது நாழிகைகளாகவும், ஆறு சிறு பொழுதுகளாகவும், ஆறு பருவங்களாகவும் பகுத்த பண்டைத் தமிழன் தன்னுடைய புத்தாண்டு வாழ்வை இளவேனிற் காலத்தில்தான் - தை மாதத்தில்தான் - தொடங்குகின்றான்.

பண்பாட்டுப் பெருமை கொண்ட மற்றைய பல இனத்தவர்களும், தங்களுடைய புத்தாண்டு வாழ்வை, தங்களுடைய இளவேனிற் காலங்களில்தான் ஆரம்பிக்கின்றார்கள் என்பதையும் ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர்.

தமிழர்கள் மட்டுமல்லர், சீனர்களும், ஜப்பானியர்களும், கொரியர்களும், மஞ்சூரியர்களும் என, பல கோடி இன மக்கள் - தொன்மையான பண்பாட்டு வாழ்வினைக் கொண்ட பெருமை வாய்ந்த மக்கள்- தங்களுடைய இளவேனிற் காலத்தையே தமது புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

அந்த வகையில் தமிழர்கள் சாலப் பொருத்தமான காலமாகவே தைப்பொங்கல் திருநாளைத் தேர்ந்திருக்கின்றார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.



# பிளாஸ்டிக் துடைப்பங்களுக்குத் தடை

சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு பெரும் பங்களிக்கும் பிளாஸ்டிக் துடைப்பங்கள் மற்றும் விளக்குமாறு இறக்குமதியை தடை செய்ய வேண்டும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதன்படி, இது தொடர்பில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும் என மேற்படி குழுவின் தலைவர், கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொறியியலாளர் அஜித் மானப்பெரும தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிளாஸ்டிக் கழிவுகளை குறைக்கும் வகையில் லஞ்ச் ஷீட் பாவனையை தடை செய்வது தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் துறைசார் கண்காணிப்புக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, லஞ்ச் ஷீட்களை பயன்படுத்துவதை தடை செய்யுமாறு மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு குழு பரிந்துரைகளை வழங்கியது. அதை கடைபிடிக்க ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# சுற்றிவளைப்பில் தீவிரமாக இணையுங்கள்: பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!



யுக்திய சுற்றிவளைப்பில் இன்று முதல் தீவிரமாக இணையுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து பிராந்தியங்களுக்கும் பொறுப்பான அதிகாரிகள், மாவட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு இந்த விசேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42 ஆயிரத்து 248 பேரின் பட்டியல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யுக்திய செயற்றிட்டத்தின் கீழ் எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் தமது பொலிஸ் பிரிவை உள்ளடக்கிய வகையில் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு, பட்டியலிடப்பட்டுள்ள சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக அனைத்து குற்றப்புலனாய்வு அதிகாரிகளையும் 24 மணித்தியால சேவையில் ஈடுபடுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, யுக்திய சுற்றிவளைப்பின் போது நாட்டில் காணப்படும் சட்டக் கட்டமைப்பிற்குள், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திற்கு அமைய செயற்படுமாறு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யுக்திய சுற்றிவளைப்பின் நோக்கம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் முறைப்பாடுகள், வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் ஆகியன தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளதாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சில விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# மூன்று கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் புத்தளம் குறிஞ்சிப்பிட்டியில் ஒருவர் கைது




**ரஸீன் ரஸ்மின்**

புத்தளம் – குறிஞ்சிப்பிட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் 03 கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வத்தளை பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருளுக்கு எதிரான “யுக்திய“ விஷேட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு செல்வதற்காக பஸ்ஸில் ஏறிய போதே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், புத்தளம் மாவட்ட பதில் நீதவின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேக நபரை மூன்று நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு பொலிஸார் பதில் நீதிவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

பொலிஸார் விடுத்த கோரிக்கையை ஏற்ற பதில் நீதிவான் சந்தேக நபரை மூன்று நாள்கள் தடுத்துவைத்து விசாரிக்க அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

## வீட்டு வளாகத்தில் விளையாடிக் கொண்டிருந்த

# 9 வயது சிறுவன் கழுத்தில் பட்டி இறுகி பரிதாபச் சாவு!

வீட்டு வளாகத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவர், கழுத்தில் ‘ரபர் பட்டி’ இறுகியதில் உயிரிழந்துள்ளார்.

கலவான, பொத்துபிட்டிய பகுதியைச் சேர்ந்த தரம் 3 இல் கல்வி பயிலும் 9 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த மாணவன் கம்பியொன்றை, ரபர் பட்டியில் சுத்தி அதனைச் சுழற்றி விளையாடிக்கொண்டிருந்துள்ளார். இதன் போது கம்பி தலைப் பகுதியில் பட்டுள்ளது. அதன் பின்னர் ‘ரபர் பட்டி’ கழுத்தில் இறுகி, மாணவன் சாவடைந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# களுகங்கையில் மூழ்கி 3 மாணவர்கள் மரணம்!

## நீராடச் சென்ற வேளை துயரம்

களுத்துறை – களுகங்கையில் நேற்று நீராடச் சென்ற மூன்று மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

15 மற்றும் 16 வயதுகளையுடைய இரண்டு மாணவிகளும், 17 வயதுடைய மாணவர் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

களுத்துறை, பன்வில மற்றும் தொடங்கொடை பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நாகொட போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சோதனை நடவடிக்கையின் போது கைக்குண்டுடன் ஒருவர் சிக்கினார்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், இளவாளைப் பகுதியில் கைக்குண்டுடன் ஒருவர் பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனை நடவடிக்கை ஒன்றின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டு நடவடிக்கையுடன் தொடர்புபட்டவரிடமே இவ்வாறு கைக்குண்டு மீட்கப்பட்டதால் களவு நடவடிக்கைக்குப் பயன்படுத்தும் நோக்கில் அதை வைத்திருந்தாரா அல்லது ஏதும் சமூக விரோதச் செயலுக்காக வைத்திருந்தாரா எனப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையில் கைக்குண்டு வைத்திருந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

# மாலைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை திரும்பப் பெறுவதற்கு இந்தியாவுக்கு காலக்கெடு

## மாலைதீவு ஜனாதிபதி அறிவிப்பு




மாலைதீவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இராணுவ பிரசன்னத்தை இந்தியா திரும்பப் பெறுவதற்கான காலக்கெடுவை அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள தமது படைகளை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் திரும்பப் பெறுமாறு மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸுமுறைப்படி கேட்டுக்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி மாலைதீவில் 88 இந்திய இராணுவ வீரர்கள் இருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் பொது கொள்கை செயலாளர் அப்துல்லா நஜிம் இப்ராஹிம் செய்தியாளர் சந்திப்பின் போது, இந்தியா தனது படைகளை மார்ச் 15 ஆம் திகதிக்குள் திரும்பப் பெறுமாறு முய்ஸு கேட்டுக் கொண்டார் என கூறியுள்ளார்.

இந்திய இராணுவ வீரர்கள் மாலைதீவில் தங்க முடியாது. இது ஜனாதிபதி மொஹமட் முய்ஸுவின் கொள்கை மற்றும் அரசாங்க நிர்வாகத்தின் கொள்கையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மார்ச் 15 ஆம் திகதிக்குள் இராணுவ வீரர்களை திரும்பப் பெற வேண்டும் என்பதுதான் முடிவு என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

இது குறித்து பேச்சு நடத்துவதற்கு இரு நாடுகளும் இணைந்து உயர்மட்டக் குழுவொன்றை அமைத்துள்ளன. அதன் முதலாவது சந்திப்பு நேற்று காலை மாலேயில் உள்ள வெளியுறவு அமைச்சின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் முனு மஹாவாரும் கலந்து கொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்ற சிறிது நேரத்திலேயே சீன சார்பு அரசியல்வாதியாகக் கருதப்படும் முய்ஸஷு, மாலத்தீவுகளில் இருந்து தனது இராணுவப் படைகளை அகற்றுமாறு இந்தியாவிடம் கோரியிருந்தார்.

செப்டம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், மாலைத்தீவு மக்கள் இந்தியாவிடம் கோரிக்கை வைக்க வலுவான ஆணையை வழங்கினர் என குறிப்பிட்ட ஜனாதிபதி, மாலத்தீவு மக்களின் ஜனநாயக விருப்பத்திற்கு இந்தியா மதிப்பளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்தியாவைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக ஏனைய நாடுகளிலிருந்து தேவையான உணவுப் பொருள்கள், மருந்துகள் மற்றும் நுகர்பொருள்களை இறக்குமதி செய்வதற்கான திட்டங்களை அவர் அறிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்குச் சொந்தமானது அல்ல எனவும் மாலைத்தீவு யாருடைய கொல்லைப்புறத்திலும் இல்லை என்றும் முய்ஸு தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவை: ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்த நாட்டு சிறையில் வாடும் தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப் பட்டினம் மீன்பிடித் துறை முகத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள், கடந்த 13



ஆம் திகதி நெடுந்தீவு அருகே மூன்று விசைப்படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என முதல்வர் ஸ்டாலின் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தை இலங்கை அரசுடன் உரிய தூதரக வழிமுறைகள் மூலம் எடுத்துச் சென்று, இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வர் ஸ்டாலின் மத்திய அமைச்சர் ஜெய்சங்கரிடம் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பொங்கல் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பு



மத்திய இணை அமைச்சர் எல். முருகனின் டில்லியில் உள்ள வீட்டில் நடந்த பொங்கல் கொண்டாட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் எல்.முருகன் ஒவ்வொரு ஆண்டும் டில்லியில் உள்ள தனது வீட்டில் பொங்கல் பண்டிகை கொண்டாடி வருகிறார்.

இந்தாண்டு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி சட்டையுடன் கலந்து கொண்டு, பானையில் பொங்கல் வைத்தார். இந்த விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

# உக்ரைன் மீது ரஷ்யா ரொக்கெட் தாக்குதல்!



கடந்த சில நாள்களாக உக்ரைன் மீது ரஷ்யா கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் உக்ரைனும் அதனை முறியடித்து வருகிறது.

அதேபோன்று நேற்று முன்தினம் இரவு உக்ரைன் மீது ரஷ்யா திடீர் ரொக்கெட் தாக்குதலை நடத்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் – ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கை கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி தொடங்கிய நிலையில், இந்த போர் நடவடிக்கையானது இன்னும் சில தினங்களில் 2 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ளது.

இதுவரை நடந்த போர் தாக்குதலில் பொதுமக்கள், இராணுவ வீரர்கள் என லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர், பலர் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கின்றனர்.

இருப்பினும் உக்ரைன் வான் பாதுகாப்பு பகுதியை கைப்பற்றும் நோக்கில் ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உக்ரைனிய நகரங்களை குறிவைத்து ரஷ்யா 40 ஏவுகணை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் 8 ஏவுகணைகளை துணிவுடன் எதிர் கொண்டு வீழ்த்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

மேலும், உக்ரைனின் மின்னணு வான் தடுப்பு சாதனங்கள் மூலம் ரஷ்யாவால் ஏவப்பட்ட மேலும் 20 ஏவுகணைகள் இலக்கை அடையாமல் தடுத்து நிறுத்தப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவின் சுரங்கப் பாதை மூடும் வரை போரை நிறுத்தமாட்டோம்: நெதன்யாகு



“எகிப்து – காசா எல்லையின் கீழ் சுரங்கப்பாதை உள்ளது. இது காசாவிற்கு ஒரு முக்கிய விநியோக பாதையாக உள்ளது. இந்தப் பாதையை மூடும் வரை நாங்கள் போரை நிறுத்தமாட்டோம்” என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி வாயிலாக மக்களிடம் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

“எங்களை யாரும் தடுக்கமாட்டார்கள். வெற்றி பெறும் வரை போர் தொடரும். காசாவில் நடத்திய இராணுவ தாக்குதலில், பெரும்பாலான ஹமாஸ் படையினரை அகற்றிவிட்டோம். ஒரு சர்வதேச சட்டம் உள்ளது. அது ஒரு எளிய விடயத்தை சொல்கிறது. வடக்கு காசாவில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் எந்த நேரத்திலும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பமுடியாது” எனத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், ஹமாஸ் இடையிலான போர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கியது. தற்போது போர் 100 எவது நாளை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப்போரில் பாலஸ்தீன மக்களில் பெண்கள், குழந்தைகள் என 22 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பாலஸ்தீன நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சீனப் பெருஞ்சுவரில் உலகின் மிக நீளமான ஓவியம்!



சீனாவைச் சேர்ந்த குவோ ஃபெங் என்ற பெண் ஓவியர், சீனப் பெருஞ்சுவரின் மேல் உலகின் மிக நீளமான ஓவியத்தை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

அவரின் இந்த சாதனை கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆயிரத்து 14 மீட்டர் நீளமுள்ள ஓவியத்தை, கேன்வாஸில் ‘காலப்போக்கில் நாகரிகத்தின் வளர்ச்சி’ என்ற கருப்பொருளை மையமாக கொண்டு அவர் வரைந்துள்ளார்.

சீனப் பெருஞ்சுவரின் மேல் 60 நாள்களுக்கும் மேலாக அமர்ந்து இந்த பிரமிக்க வைக்கும் ஓவியத்தை குவோ ஃபெங் வரைந்துள்ளார்.

இதேவேளை, உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவர், உலகின் ஏழு அதிசயங்களில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது.

சீனாவின் மலைகளுக்கு இடையே நீண்டதாக கட்டப்பட்ட சீனப் பெருஞ்சுவர் அந்நியப் படையெடுப்பை சீனாவுக்குள் அனுமதிக்கக் கூடாது என்ற பாதுகாப்பு நோக்கத்திற்காக கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. இதற்கான கட்டுமானப் பணிகள் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டதுடன், 21 ஆயிரத்து 190 கிலோ மீற்றர் நீளத்தில் அந்த சுவர் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.01.2024




எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப் பீர்கள்.




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடு பாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங் களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக் காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர் பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடின மாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் கவலை அளிக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies

KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park

# இன்றைய ராசி பலன்கள் - 15.01.2024




எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப் பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங் களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக் காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள்.




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடு பாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர் பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடின மாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் கவலை அளிக்கும்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327
077 336 6443 | 071 777 2377
021 567 5566 | 021 222 9581
021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# எம்.பிக்களின் குடியிருப்புத் தொகுதியில் வசிக்கும் அரைவாசிப் பேர் வெளியாராம்!

மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்புத் தொகுதியில் வசிக்கும் 50 வீதமானோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லர் எனவும் வெளியாள்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் இந்த குடியிருப்புகளில் வசிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பு கொழும்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகிறது. இந்த வீடுகளைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் வருடாந்தம் பல கோடி ரூபாவை செலவு செய்கிறது.

இந்த நிலையில், இந்த வீடுகளை வெளியாள்களுக்கு வழங்க வேண்டாம் என பலமுறை அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து இவ்வாறு வீடுகள் வேலையாள்களுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்துடன் இந்த வீடுகள் வழங்கப்படுகின்றன எனவும், இதன் காரணமாக அவர்களை வெளியேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகத்தை நடத்துவதற்கான செலவும் இருமடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# தைத்திருநாள் சிறப்பிதழ்





# தமிழர் பாரம்பரியத்தை சந்ததிக்குக் கடத்தும் பொங்கல்...!

- பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ், மஸ்கலியா -

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது ஆன்றோர் வாக்கு.

சூரியனே இந்த உலகின் ஒளிப்பிரவாகத்தை ஏற்படுத்துபவன் . அந்த சக்தியின் பெருமையை பறைசாற்றி உழவர்களை முன்னிலைப்படுத்தும் பொங்கல் தினம் !

பழைய பகைமையை, குரோதங்களை தம் மனதில் இருந்து களைந்து விட வேண்டும் என்று போதிக்கும் போகிப் பண்டிகை !

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் வாழப் பிறந்தவை. அவற்றை மனிதன் நேசிக்கப் பழகிக் கொள்ள வேண்டுமென எடுத்தியம்பு கின்ற மாட்டுப் பொங்கல் !

ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் உறவுகள் முக்கியமானவை . அந்த உறவு களின் பெருமையை வலியுறுத்துவதற்காக கொண்டாடப்படும் காணும் பொங்கல் !

இவ்வாறு ஒரு அர்த்த புஷ்டி நிறைந்த பண்டிகையாகத் திகழ்கின்றது இந்தப் பொங் கல் பண்டிகை !

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம் தொழுதுண்டு பின் செல் பவர்'

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தனது திருக்குறளில் உழவுத் தொழிலுக்கும், நன்றி உணர்வுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இயற் றிய குறட்பாக்கள் பத்து.

தென்னாசிய மக்களின் ஜீவனோபாய தொழில் விவசாயம். உழவர்களால் காலா காலமாக கொண்டாடப்படும் உன்னதமான விழா பொங்கல் விழா.

இவ்வுலகமே நம்பியிருக்கும் ஒரே ஜீவன் விவசாயி. அதனால் தான் 'உழவன் இன்றேல் இவ்வுலகம் இல்லை' என முன்னோர்கள் கூறி வைத்தனர்.

உலகிலேயே உழவர்களுக்காக கொண்டா டப்படும் ஒரு தினம் இந்தத் தினம்!

ஆரம்பகால மனிதர்கள் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்து வந்துள்ளனர் . சிந்துவெளி நாகரிகம், மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிகக் காலகட்டங்களில் இவற்றைச் சிறப்பாக அவ தானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த நாகரிகங்கள் தமிழர் பண்பாட்டுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்ட வையாக இருப்பதை நோக்கலாம்.

ஒரு சமூகத்தின் பண்பாடு, கலை, கலாசாரம், மொழி என்பன பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. அவைகளே, ஓர் இனத் தின் அசைக்க முடியாத சொத்துக்களும், அடையாளங்களும் !

நமது பண்பாட்டில், மரபில், வாழ்க்கை முறையில் ஆழ வேரூன்றிய ஒரு விழா பொங்கல் விழா ! அந்த வகையில், நாம் எமது பண்பாட்டு அம்சங்களை தொடர்ச்சியாகப் பராமரித்து வருவது போற்றப்படக் கூடிய விடயம்.

பொங்கல் பண்டிகை மனிதனுக்கும், இயற்கைக்கும், அவனோடு சார்ந்து வாழும் உயிரினங்களுக்கும் இடையிலான தொடர்பை உணர்த்தும் ஓர் தினம் !

சங்ககால நூல்கள் பலவும் தைத்திருநாளை சிறப்பாக எடுத்தியம்பியிருக்கின்றன.

'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' (நற்றிணை)

'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' (குறுந் தொகை)

தொடர்ச்சி▼

## தைத்திருநாள் சிறப்பிதழ்



# தமிழர் பாரம்பரியத்தை சந்ததிக்குக் கடத்தும் பொங்கல்...!

தொடர்ச்சி▲

'தைஇத் திங்கள் தண்கயம் போல்' (புறநானூறு)

'தைஇத் திங்கள் தண்கயம் போது' ( ஐங்குறுநூறு)

'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' (கலித்தொகை)

எனப் பலவாறாக தைத் திருநாளின் சிறப்பியல்புகளை பழந்தமிழர் இலக்கியங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

எமது மூதாதையர்கள் எவ்வளவு சிறப்பாக இவ்விழாவை கொண்டாடியிருந்தனர் என்பதற்குச் சங்க கால இலக்கியங்களே சான்றுகள் !

புறநானூற்றுப் பதிகத்தில் சாத்தனார் என்னும் புலவர் பொங்கல் எவ்வாறு சமைக்கப்படுகின்றது என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்தப் பண்டிகையின் பொழுது அரிசியும், பாலும் சேர்க்கப்பட்டு பொங்கப்படும் ஒரு விழாவென அழகாகக் குறிப்பிடுகின்றார். என்ன ஆச்சரியம் ? இரண்டாயிரம் வருடங்களாக இந்த உணவு செய்முறையில் எத்தகைய மாற்றமுமில்லாமல் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றது.

தைப்பொங்கல் தமிழரின் வாழ்வில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். உலகிலுள்ள சகல ஜீவராசிகளின் வளர்ச்சிக்கும், அவற்றின் ஆரோக்கியத்துக்கும், இயற்கையின் பங்களிப்பு மிகவும் தேவைப்படும் ஒன்றாகும்.

இவற்றில் சூரியனது ஒளிப் பிரவாகம் மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

எமது அடிப்படை உணவு சோறு! இதனை எமக்கு உருவாக்கி தருபவர்கள் உழவர்கள். அவர்கள் பாராட்டப்படக் கூடியவர்கள். 'உழவர், சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்' என்பதை அனைவரும் அறிவர்.

இதுபோல , உழவுத் தொழிலில் பயன்படுத்தப்படும் மாடுகள் போன்ற விலங்குகளுக்கும் நன்றி செலுத்துவது தவிர்க்க முடியாதது. அது நமது நன்றிக் கடன்.

அதுவும் செய்நன்றிக் கடன்! மனித பிறப்போடு சேர்ந்து வருவது தான் நன்றியுணர்வு.

நன்றி கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தினம் தான் தை மாதத்தில் வரும் முதலாம் நாள்!

இந்த நன்றி உணர்வானது இற்றை வரை மனித குலத்தில் வேரூன்றி நிற்பதை நாம் அவதானிக்க முடியும்.

மனிதனுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்காக , எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் வெயில், மழையென பாராது, அல்லும் பகலும் உழைக்கும் காலகளும், பிற உயிரினங்களும் போற்றப்படத்தக்கவை.

தை மாதம் என்றாலே இராம பஜனை ஊர்வலங்களையும், கீர்த்தனைகளையும், எங்கும் கேட்கலாம். அந்தக் காலங்களில் எங்களது ஊரில் பெண்கள் அதிகாலையில் எழுந்து கோலமிடுவதும், பஜனையில் வரும் கம்பத்தை வழிபடுவதுவும் சிறப்பம்சம்.

பொங்கல் விழாவின் போது கோலப் போட்டிகள் விமர்சையாக நடத்தப்படும். வித விதமான கோலங்கள் கண் கொள்ளாக் காட்சியாக, மனதில் ஒரு குதூகலத்தை ஏற்படுத்தும். வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவர்.

அரிசி மாவினாலான கோலமிடுவதன் மூலமாக, அனைத்து உயிரினங்களுக்கும் உணவளித்தவர்கள் எம் வழிகாட்டிகள்!

மாவால் கோலமிடும் போது எறும்பு முதலான ஊர்வனவும், குருவிகளும், தமக்கான உணவாக அதனைச் சாப்பிடும். 'ஓரறிவுள்ள உயிர்கள் தொடக்கம் ஆறறிவுள்ள உயிர்கள் வரை வயிறார உண்ண வேண்டுமென்பதே' அதன் தத்துவமாகும்.

அன்றைய தினம் விருந்தோம்புவதிலும் எம்மவர் சளைத்தவரல்ல. பொங்கல் பொங்காதவர்களுக்கு பகிர்ந்து உண்ணும் பழக்கத்தையும் கொண்டிருந்தனர்.

பொங்கல் விழா நான்கு தினங்கள் கொண்டாடப்படுகிறது.

போகி: பழையன கழித்து, புதியன புகவிடும் நாளாகப் பொங்கலின் முதலாவது நாள் கருதப்படுகிறது. அதாவது வீட்டில் இருக்கும் பழைய மற்றும் தேவையில்லாத பொருள்களை நீக்கி விட்டு, புதியவைகளைக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கமே இதன் அடிப்படையாகும். இந்திர விழா என்ற பெயரில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் இந்திரனை ஆயர்கள் போகி பண்டிகை தினத்தன்று வழிபட்டு வந்தனர்.

சூரியப் பொங்கல்: அவன் இன்றி அணுவும் அசையாது என்பது போல, சூரிய வெளிச்சமின்றி இந்த உலகம் இயங்காது. உலக மக்களுக்கு, அவர்களது வாழ்வாதாரத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இலவசமாக அளிக்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இந்த நாள் காணப்படுகின்றது.

மாட்டுப் பொங்கல்: சூரியப் பொங்கலுக்கு அடுத்த தினம் மாட்டுப் பொங்கல் தினமாகும். மனிதனது வாழ்க்கையில் ஆடு, மாடுகள் உள்ளிட்ட பல்வேறு விலங்கினங்களின் பங்களிப்பு முதன்மையானது . மனிதனுக்குத் தேவையான பாலை கொடுப்பது மாத்திரம் அல்லாது, வயல் உழுவதற்கும், போக்குவரத்துக்கும், உரப்பாவனைக்கும், இவைகள் பெரிதும் உதவுகின்றன. இவைகளின் சேவைகளுக்கு நன்றி கூறும் முகமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது . அத்துடன் பசுக்களை தெய்வமாக வழிபட்டவர்கள் நம் முன்னோர்கள். பசுக்களில் அனைத்து தேவர்களும் இருப்பதாக கருதப்படுவதால் அவைகளுக்கான தினமாக இது உள்ளது

காணும் பொங்கல்: இறுதி நாள் கொண்டாட்டமாக காணும் பொங்கல் காணப்படுகின்றது. அன்றைய தினம் உற்றார், உறவினர்,

தொடர்ச்சி▼

தைத்திருநாள் சிறப்பிதழ்

# தமிழர் பாரம்பரியத்தை சந்ததிக்குக் கடத்தும் பொங்கல்...!

தொடர்ச்சி▲

நண்பர்களை சந்தித்தல், பெரியோர்களது ஆசி பெறுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்தியாவின் பிற பகுதிகளில் சூரிய வழிபாடு மகர சங்கராந்தி என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இந்தியக் கலாசாரத்தின் தாக்கம் கொண்ட, இந்தோனேசியா, தாய்லாந்து, லாவோஸ், நேபாளம், மியான்மர் போன்ற ஆசிய நாடுகளிலும் கூட மகர சங்கராந்தி விழா வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்படுகிறது.

பஞ்சாப், ஹிமாச்சல் பிரதேசம், ஹரியான, ஜம்மு ஆகிய மாநிலங்களில் சூரிய வழிபாடு 'லோரி' என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றது. அசாம் மாநிலத்தில் 'மாக்' என்ற பெயரிலும், குஜராத்தில் 'உத்தராயன்' என்ற பெயரிலும் கொண்டாடப்படுகின்றது.

தமிழர்கள் பிறக்கும் தை மாதத்தில் நல்ல பலன் தரக்கூடிய நற்காரியங்களைத் தொடங்குவர்.

இயற்கையோடு இணைந்து வாழும் பொழுது எமது உடல் நலம் மேம்படும். எமது இதயங்களில் நல்ல பண்புகளும், கருணையும் பெருக்கெடுத்து ஓடும். இந்த இனிய திருநாளில் தங்களுக்கும், தங்களது குடும்பத்தாருக்கும், சுற்றத்தார்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

அனைவரது வாழ்விலும் சாந்தி , சமாதானம், நல்லிணக்கம், சிறந்த ஆரோக்கியம், வளமான வாழ்வு ஏற்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# தைப்பொங்கலும் தமிழர்களது வீர விளையாட்டும்...!



- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

ஆதிகாலத்தில் உழவுத் தொழிலே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்து வந்துள்ளது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித் தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்துக்கு உதவியாக இருந்த மாடுகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத் தைப்பொங்கலைத் தொன்று தொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

### தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்

தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்வதற்கமைய தையே தமிழரின் புத்தாண்டு என்றும் கூறிடுவர்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல், அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்லி, உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப்படைப்பது தமிழர் வழமை.

தொடர்ச்சி▼

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# தைப்பொங்கலும் தமிழர்களது வீர விளையாட்டும்...!

தொடர்ச்சி▲

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் 'தைத்திங்கள்' பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. 'தைத்திங்கள் தண கயம் படியும்', 'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.

சங்க இலக்கியங்களான சிலப்பதிகாரத்தில் இந்திரவிழாவான பொங்கல் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்..' என்று உழவுத் தொழில் பற்றி ஔவையார் குறிப்பிடுகின்றார். 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

தைப்பொங்கல் என்றாலே தமிழ் மக்களின் வாழ்வில் விழாக்கோலம் பூண்டு விடும் பண்டிகைக் காலமாக அமைந்துவிடும். தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாகப் பிறக்கும் தைப் பொங்கல் நாள்களிலேயே , தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாகக் காலங் காலமாக நடத்தப்படுகின்றன.

### தமிழரின் பாரம்பரிய விளையாட்டு

தை பிறந்த பின்னரே உழவரின் வாழ்வும் சிறப்படையும். உழவர்களின் வாழ்வியல் திறமைகளை வெளிக்கொணரும் விளையாட்டே மாட்டு வண்டிச் சவாரியாகும்.

விழாக்கோலம் தோன்றிடும் பண்டிகைக் காலமாக அமைந்திடும் தைப்பொங்கல் தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாகப் பிறக்கும். தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக் கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாகக் காலங் காலமாகத் தைப் பொங்கல் நாள்களிலேயே விமர்சையாக நடத்தப்படும்.

ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி உள்ளது. மாட்டு வண்டிச் சவாரி ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் உள்ளது.

மாட்டு வண்டிச் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒருபுறம் அடையாளங் காட்டி நிற்க, மறுபுறம் விவசாயத்தின் முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகின்றது.

சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இது ஒரு வீர விளையாட்டு என்ற காரணத்தால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளை மாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டிச் சவாரி

ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாகத் தொடர்வதை நாம் அவதானிக்கலாம்.

அந்தக் காலப் பகுதிகளில் யாழ்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித் தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்கார சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர்.

மாட்டு வண்டில் சவாரியைப் பொழுது போக்காக மாத்திரமன்றித் தொழிலாகவும் செய்தவர்கள் பலருளர். அவ்வாறு மாட்டுவண்டிச் சவாரித் தொழிலில் ஈடுபடுவோரை 'சவாரி' என்றே அடைமொழிவைத்து அழைப்பதும் பழக்கத்தில் இருந்துள்ளது. சவாரி வண்டிலில் ஆசனப் பலகையில் இருந்து மாடுகளை சுறுசுறுப்பாக அவர் வழி நடத்திச் செல்லுவார்.

தினகரன், ஈழநாடு நாள் ஏடுகள் நடத்திய போட்டி மாட்டுச் சவாரியைத் தேசிய விளையாட்டு நிலைக்கு உயர்த்தின என்றால், 1974 இல் நடந்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இந்தக் கலையை அனைத்து உலக நிலைக்கு உயர்த்தியது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்து மக்கள் பார்த்துச் சுவைத்த இந்தப் போட்டியை வெளிநாடுகளில் இருந்து வந்த பார்வையாளர் பார்த்துப் பாராட்டினர். கைதட்டி மகிழ்ந்தனர்.

தமிழ் நாட்டில் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் நடந்த அனைத்துலகத் தமிழ் மாநாடுகளின்போது சல்லிக்கட்டுக் காளை விளையாட்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது. அதேபோன்ற பாராட்டு யாழ்ப்பாணத்

தொடர்ச்சி▼

தைத்திருநாள் சிறப்பிதழ்



# தைப்பொங்கலும் தமிழர்களது வீர விளையாட்டும்...!

தொடர்ச்சி ▲

துச் சவாரிக்கும் கிடைத்தது.

யாழ்ப்பாணத்துக் கமக்காரர் மட்டும் சவாரியில் ஆர்வம் உடையவர்கள் எனக் கொள்தல் பொருந்தாது. கோப்பாய் நாகநாதன், தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம், சட்டத்தரணி ஐயக்கோன் செல்லத்துரை போன்றவர் இக்கலையில் பெரும் ஈடுபாடுடையவர்கள். இக்கலையை நவீன மயப்படுத்தி விதிமுறைகளை ஏற்படுத்தவேண்டும் என்பதில் கற்றவர் பலரும் ஆர்வம் காட்டி வந்தனர்.


அரச அலுவலராகக் கடமை புரிந்த "இலங்கையர்கோன்" சிவஞானசுந்தரம், 'சவாரி' செல்வரத்தினம், அரசாங்க மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் சுன்னாகம் இ. இளையதம்பி போன்றோர் ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரிக்குப் பெரும் பணி ஆற்றியுள்ளனர்.

ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியானது ஒரு இடத்தில் நடக்கப்போகின்றது என்றால், அது அனைவருக்கும் பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இந்தப் போட்டியானது நீர்வேலி சவாரித்திடல், முல்லைத்தீவு மாவட்டம், வவுனிக்குளம், முழங்காவில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

### மாட்டுவண்டிச் சவாரி பற்றிய நூல்கள்

மாட்டுவண்டிச் சவாரி இன்றளவும் தன் பிரபல்யத்தை இழந்துவிடவில்லை என்பது உண்மை. இந்தச் சவாரியானது முன்னைய காலப் பகுதியோடு ஒப்பிடும் போது தற்காலத்தில் குறைந்த அளவிலே நடைபெற்று வந்தாலும், தமிழர் மரபுரிமைகள் பேணப்படும் விடயத்தில் அதன் சிறப்புரிமை இன்னும் மங்கிவிடவில்லை என்றே தென்படுகிறது. ஆயினும் மாட்டுவண்டிச் சவாரி பற்றிய தரவுகளையும், பதிவுகளையும் பேணும் ஓரிரு நூல்களே இதுவரையில் வெளிவந்துள்ளன.

1986 இல் வெளியான தெல்லிப்பளை த. சண்முகசுந்தரம் எழுதிய "யாழ்ப்பாணத்து – மாட்டு வண்டிச் சவாரி" எனும் சிறு நூலே, ஈழத்து மாட்டுவண்டிச் சவாரியை பல்வேறு தரவுகள்




கொண்டு வெளிவந்த முதல் நூல் எனலாம்.

அதன்பின் 2022 இல் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய "ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" எனும் நூல் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாற்பது வருடம் சுன்னாகத்தில் மருத்துவ சேவைகளாற்றிய பிரபல வைத்தியர் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் நினைவு வணக்க நிகழ்வாக சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் கடந்த 2022 ஏப்ரல் மாதம் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு எமது அடுத்த தலைமுறையிரிடம் இருப்பதால் இந்த விளையாட்டுக்களைப் பற்றி, முக்கியமாகப் புலம்பெயர்ந்த அடுத்த தலைமுறையினருக்கும் அறியத் தருவோம்.

தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பழந்தமிழ் வீர விளையாட்டுக்களையும், தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெரும் கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும்.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# சூரியனுக்கு நன்றி கூறும் பொங்கல் திருநாள்!



**- மிருணாளினி நடராஜன் -**

தமிழர்களின் நற்பண்புகளான விருந்தோம்பல், நன்றி கூறுதல், எல்லோருக்கும் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புகளை பிரதிபலிக்கும் ஒரு உன்னத திருநாளாகவும்அமைகின்றது.

சூரிய பகவான் ஒரு வருடத்தின் கால நிலையை வரையறுத்து மழை வீழ்ச்சியையும், பயிர்கள் வளர்வதற்கு தேவையான சாதகமான கால நிலையையும் ஏற்படுத்தி கொடுப்பதால் உலகில் மானிடர்கள் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு ஓர் உயர் கொடுக்கும் சக்தியாக இருந்து வருகிறார்.

உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மானிடப் பிறவிகளான நாம் சூரிய பகவானை துதித்து வழிபடவேண்டிய நிலையில் இருக்கின்றோம். சூரிய பகவானின் அனுக்கிரகத்தால்தான் உலகில் பயிர்கள் செழித்து வளர்ந்து எமக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொடுக்கின்றன.

நதிகளில் இருந்தும், நீர்த்தேக்கங்களில் இருந்தும் நீரைப் பயன்படுத்திய விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் விளைச்சல் நிலங்களை பொன் விளையும் பூமிகளாக மாற்றுகின்றார்கள்.

நாற்சதுரமாக நாற்புறமும் வாசல் வைத்து கோலம் போட்டு குறிக்கப்பட்ட இடத்தை புனித இடமாக மதிப்பார்கள். கோலம் போடப்பெற்ற இடத்தை நான்கு கம்புகள் நட்டு அதில் நூல் கட்டித் தோரணம், மாவிலை தொங்க விடுவார்கள். கோலமிட்டு புனிதமாக்கிய இடத்தின் நடுவில் புதிதாக மண்ணால் பிடித்து வைத்த மூன்று அடுப்பு கட்டிகளையும் வைத்து பொங்கல் பானை வைப்பதற்கு அடுப்பை தயார்படுத்துவார்கள். சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்குவதற்கு முன் வீட்டின் சுவாமி அறையில் தீபம் ஏற்றி வணங்கிய பின் சூரிய பொங்கலை ஆரம்பிப்பார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தோத்திரங்கள் பாடி நிற்க சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து (பிள்ளையார் சிலையும் வைக்கலாம்), நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, தேங்காய் உடைத்து வைத்து தூபம், தீபம் காட்டி விநாயகரை வழிபட்டபின், அடுப்பில் நெருப்பு மூட்டி, புதுப்பானையின் கழுத்தில் மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலைகளைக் கட்டி (காப்புக் கட்டி), விபூதிக் குறிகள் வைத்து, திலகமிட்டு புனிதமாக்கி அதனுள் நீரும் பசுப்பாலும் விட்டு அடுப்பில் பொங்க வைப்பார்கள்.

பால் பொங்கி எழுந்து வழியும்வரை நெருப்பைக் கூட எரிய விடுவார்கள். பால் பொங்கி வழியும்போது கடவுளை வணங்கி “பொங்கலோ பொங்கல்” என ஆரவாரித்து புது அரிசியை வீட்டுத் தலைவர் அல்லது ஆண்மகன் இரு கைகளாலும் கிள்ளி மூன்று முறை (வலஞ் சுளியாக) சுற்றி பானையில் இட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

அப்போது சக்கரைப் பொங்கலாயின் பயிற்றம் பருப்பு, சக்கரை, கஜு, ஏலக்காய் முதலியவற்றை போட்டு பொங்கல் செய்வார்கள். பொதுவாக தைப் பொங்கலின்போது சக்கரைப் பொங்கலே பொங்குவது வழக்கம் ஆனால் சிலர் வெண் பொங்கலும் வைப்பார்கள். சிறுவர்கள் பட்டாஸ் கொழுத்தி, மகிழ்ச்சியோடு ஆடிப் பாடுவர்.

பால் பொங்கி அரிசி போட்டபின் பானையில் இருக்கும் மிதமிஞ்சிய நீரை ஒரு சுத்தமான பாத்திரத்தில் எடுத்து அதனை பூஜைகள் முடியும் வரை வைத்திருந்து அதனை மாவிலை கொண்டு வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் படும்படியாக தெளிப்பார்கள். அந் நீரில் சூரியனின் சக்தி இருப்பதால் சூரிய பகவானின் சக்தி எல்லா இடங்களிலும் பட்டு பிரகாசிக்கும் (தோஷங்கள் நீங்கும்) என்பது நம்பிக்கை.

வேளாண்மைக்கு வேண்டிய மழை நீரையும், சூரிய ஒளியையும், காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி தம்மையும், நாட்டையும் செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வழிமண்டலம், நீர் நிலைகள் போன்றவற்றிற்கும்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழவர்களால் கொண்டாடப்பெற்று வந்துள்ளது.

தொடர்ச்சி ▼

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# சூரியனுக்கு நன்றி கூறும் பொங்கல் திருநாள்!

தொடர்ச்சி▲

தற்பொழுது பொங்கல் விழாவானது முன் போல் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், கல்விக் கூடங்கள், தொழில் நிலையங்களிலும், இந்துக்கள் அல்லாத தமிழ் மக்களாலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதால் தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுச் சிறப்படைகின்றது.

தைப்பொங்கல் பண்டிகையின் போது உழவர்கள் தாம் அறுவடைசெய்த "புதிரை" (நெற் கதிர்களை) அரிசியாக்கி அதில் பொங்கல் செய்து கொண்டாட, பல்வேறு தொழில் புரிவோர் உழவர்களுடன் பண்டமாற்றுச் செய்து புதிய அரிசியை வாங்கி பொங்கல் செய்து கொண்டாடு கின்றார்கள்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் அதிக மாக வாழும் கனடாவில் உள்ள மிகப்பெரிய "மார்க்கம்" மாநகர சபை ஒவ்வொரு வருடத் திலும் வரும் ஜனவரி 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளை தமிழர்களின் பாரம்பரிய நாள் களாகவும், தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகவும் அங்கீகரித்துள்ள துடன் தை மாததைத் தமிழர்களின் புனித மாதமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் கனடாவில் ஒரு தமிழர் பண்டி கையையும் அதனோடு தொடர்புடைய மாதத் தையும் அதிகார பூர்வமாக அங்கீகரித்த முதல் வெளிநாட்டு மாநகர சபை என்ற பெருமையை "மார்க்கம் நகர சபை" பெற்றுள்ளது.

உழவர்கள் மார்கழி மாதத்தில் (தைப் பொங்கலுக்கு முன்) ஒரு நல்ல நாள் பார்த்து "புதிர் எடுத்தல்" நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் காலையில் குளித்து கடவுளை வணங்கி வய லுக்குச் சென்று வயல் வரம்பில் முதற்கட வுளான பிள்ளையாரை வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைப் படைத்துத் தேங்காய் உடைத்து விநாயகரையும், குலதெய் வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறு வடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டு செல் வார். இதேநேரம் குடும்பத்தலைவி தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, மெழுகி புதிர் வாங்கு வதற்கு தயாராக இருப்பார்.

தலைவன் கொண்டு வருகின்ற நெற் கதிர்களை மனையாள் வாங்கி சாமியறைக்கு கொண்டு செல்லும் வழக்கம் உண்டு. அதன் பின்னர் கடவுளை வணங்கிப் புதிய நெற் கதிர்களை சாமியறை மற்றும் சமையல் அறை களில் கட்டித் தொங்கவிடுவார்கள்.

மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசி யாக்கி தைப் பொங்கலுக்காக வைத்திருப் பார்கள். கடின உழைபின் மூலம் கிடைக் கப்பெற்ற நெற்கதிர்களை நல்ல நாளில் "புதிர்" எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் அவர் களுக்கு சாப்பாட்டுக்குக் குறைவிருக்காது என்பது நம்பிக்கையாகும்.

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம்வீட்டுப் பொங்கல் படையல் சூரியன் உதிக்கும் போதே முதல் நல்விருந் தாக அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக் கான ஆயத்தங்களைச் செய்வார்கள். எல் லோரும் அதிகாலையில் தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள்.

முற்றம் சிமெந்தால் ஆனதாயின் அதனை சுத்தம் செய்து கழுவிக் கோலம் போடுவார்கள். அத்துடன் வீட்டு வாசலில் (கதவு நிலையில்) மாவிலை கட்டிச் சூரிய பகவானை வரவேற்க தயாராக இருப்பார்கள்.

புதுமனை, புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை "தலைப் பொங்கல்" என வெகு சிறப்பாக கொண்டாடுவார்கள்.



# தைத்திருநாள் சிறப்பிதழ்



# இறை பிரார்த்தனைகளுடன் வாழ்த்துக்களும் நல்லாசிகளும்!



தமிழ் மக்களின் அறுவடைப் பண்டிகை விழாவாக, உழவர் திருநாளாக, தைத்திருநாள் காணப்படுகிறது.

சமய ரீதியாக நாம் பார்க்கும் போது எம்மிடம் இல்லாதது எதுவும் இல்லை. வாழ்வியலின் அடிப்படைகளாக சமயநெறி காணப்படுகிறது. அன்பையும் பண்பையும் நனி நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கையும் அறச்சிந்தனைகளுடன் தர்மத்தைப் போதித்து நிற்கிறது.

இந்த வகையில்தான் உழவர் பெருமக்கள் சூரிய பகவானுக்கும் தொடர்ந்து விவசாயத்துக்கு உதவிய கால்நடைகளுக்கும் நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கையும் உணர்த்துவதாக காணப்படுகிறது.

எமது சங்க இலக்கியங்களில், “தை இத் திங்கள் தண்கயம் படியும்” என்று நற்றிணையிலும் “தைஇத் திங்கள் தண்ணிய தரினும்” என்று குறுந்தொகையிலும் “தைஇத் திங்கள் தண்கயம் போல்” என்று புறநானூற்றிலும் “தைஇத் திங்கள் தண்கயம் போல” என்று ஐங்குறுநூற்றிலும் “தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ” என்று கலித்தொகையிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

இந்தத் தருணத்தில் அனைத்து மக்களும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

‘சுப மங்களம்’

**சிவாகமகலாநிதி**
**சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்,**
**தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**
**சிவஸ்ரீ ச.சாந்தரூப குருக்கள்,**
**செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.**

# மண்ணில் நீதியும், நிம்மதியும் நிலவ இறைவனை வேண்டுங்கள்

சைவத்தமிழ் மக்களின் பண்டிகைகளில் தைப்பொங்கல் விழா முதன்மையானது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு பொங்கிப்படைத்து நன்றி சொல்லுவதுடன், பாடுபட்டு உழைக்க உழவர் பெருமக்களுக்கும் நன்றி கூறும் நாளாக இந்த நாள் கருதப்படுகிறது.

முற்றத்தில் குடும்பமாகப் பொங்கிப் படைத்து உறவினர், நண்பர்களுக்கு உணவை பகிரந்து அன்பைப் பெருக்கும் பண்பாட்டு நாளாக தைத் திருநாளை எம்முன்னோர் காத்து வளர்த்தனர்.

எனவே அனைத்து மக்களும் வீட்டு முற்றத்தில் பொங்கிப் படையுங்கள். எமது பாரம்பரியமான இவ்விழாவைச் சிறப்பாகப் பேணி எமது தலைமுறை பின்பற்ற வழி செய்யுங்கள்.

எங்கள் மண்ணில் நீதியும், நிம்மதியும் நிலவ இறைவனை வேண்டுங்கள். பாடுபட்டு உழைப்பவர்களுக்கு மத்தியில் பணத்தைத் தேட போதைப் பொருள்களில் ஆர்வம் கொள்ளும், அறியாயம் அற்றுப்போக கடவுளை வேண்டுவோம்.

எங்கள் பாரம்பரியமான பண்பாட்டையும் தாய்மொழியையும், கலைகளையும் காத்திட சகல அமைப்புகளும் பயன் நிறைந்த விழாக்களை



ஏற்பாடு செய்து சமூகத்தை ஆற்றுப்படுத்துங்கள்.

வைத்தியசாலைகளிலும், சிறைக் கூடங்களிலும் துன்புறும் மக்கள் நன்மை பெற இந்த நாளில் பிரார்த்தியுங்கள். அனைத்து அன்பர்களுக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்தையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
**தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**

# தைத்திருநாள் சிறப்பிதழ்



## ஆனந்தம் பொங்கி வழியட்டும்!



தை பிறந்தல் வழி பிறக்கும் என்ற முதுமொழிக்கு இணங்க சூரிய பகவான் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்குப் பெயர்ச்சியாகும் காலம் தைப் பொங்கல் நன் நாள் ஆகும்.

நம்முடைய மூதாதையர்கள் ஆதி காலத்தில் இயற்கையையே கடவுளாக வழிபட்டனர். ஜீவனோபாயமான வேளாமைக்கு நன்றி செலுத்தும் முகமாகச் சூரிய பகவானுக்குப் பொங்கல் விழாவும் மறு நாள் பசுக்களுக்குப் பொங்கலிட்டு வணங்கும் பட்டிப் பொங்கலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தமிழர் தம் வீரம், பராக்கிரமத்தை எடுத்தியம்பும் வண்ணம் மதுரை மாநகரில் ஜல்லிக்கட்டும் வல்வெட்டித் துறையில் பட்டத் திருவிழா, மரதன் ஓட்ட நிகழ்வுகள், கிளித்தட்டு, கும்மியடித்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறுவது மிகச் சிறப்பாகும்.

தமிழர் தம் கலை கலாச்சாரத்தை எடுத்தியம்பும் தைத்திருநாள் கொண்டாடிக் கொண்டு இருக்கும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் அடியேனின் இனிய தைத் திருநாள் நல் வாழ்த்துகள் உரித்தாகுக.

மக்கள் மனைகளிலும் மனங்களிலும் பொங்கல் இனிமை போல் ஆனந்தம் பொங்கி வளர ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவடிகள் தொழுது நல் ஆசிகளையும் நல் வாழ்த்துக்களையும் கூறி அமைகின்றோம்.

" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

சுபம்.

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,**
**பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**
**பீடாதிபதி, அகில இலங்கை சைவக் குருமார் பேரவை.**

## புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையைத் தரும் உழவர் திருநாளான தைப்பொங்கல் திருவிழா



உழவர் திருநாளான தைத் திருநாள், மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தால் கொண்டாடப்படும் ஒரு செழிப்பான அறுவடைத் திருவிழாவாகும். வளமான அறுவடையையும், புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையையும் தைப் பொங்கல் திருநாள் குறிக்கிறது.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தமது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த வாழ்த்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

தமிழ் நாட்காட்டியின்படி தை மாதத்தில் சூரியன் வடக்குக்கு நகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாக தைத்திருநாள் அமைந்துள்ளது.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக சோழர்களின் ஆட்சுக்காலத்தில் வருடத்தின் முதலாவது அறுவடைக்காக தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அறுவடையின் செழுமைக்கு வித்திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்ட அனைத்துக்கும் மனதார நன்றி கூறுவதேக பண்டிகையின் நோக்கமாகும்.

இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகின்றது. வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. அந்த அனைத்துப் பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் இனத்தில் இயற்கையின் ஆசிர்வாதம் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

அதேபோல் தைப்பொங்கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பையும் போதிக்கிறது. அதற்கமைய நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கு ஒருதாய் மக்களாக முன்னேற்றம் அடைய வேண்டும் என அனைவரித்திலும் கேட்டுக்கொள்ளும் அதேநேரம், தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். – என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# இன்னும் பல சவால்களுடன் இன்னுமொரு ஆண்டிற்குள்!

## தைப்பொங்கல் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர்



இலங்கைவாழ் மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்து மக்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாக பக்தியுடனும் மரியாதையுடனும் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் தொடர்பில் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது பொங்கல் வாழ்த்தில் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:–

மானுட வளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நாம் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிறோம். உலகிற்கு உயிர் கொடுக்கும் சூரிய பகவானை வழிபடுவது பண்டைய காலத்திலிருந்தே நடந்து வருகிறது. தைப்பொங்கல் பண்டிகை இந்த சூரிய பகவான் மீதுள்ள அபரிமிதமான நம்பிக்கை மற்றும் மரியாதைக்காக நடத்தப்படும் ஒரு சிறப்பு விழாவாக இந்த தைப்பொங்கள் திருவிழாவை சுட்டிக்காட்டலாம்.

தைப்பொங்கல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பர பிணைப்புக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும். மேலும் இந்து மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு நல்ல எண்ணங்களைச் சேர்க்கும் பண்டிகை என்றும் அழைக்கலாம்.

புதிய அறுவடையை சூரிய பகவானுக்கு படைத்து, அடுத்து வரும் ஆண்டில் நல்ல அதிர்ஷ்டத்தை கொண்டு வர வேண்டப்படுகின்றது. நம் நாட்டில் உருவாக்கப்பட்ட வங்குரோத்து நிலையால் ஏற்பட்ட சவால்மிக்க ஆண்டின் முடிவில் இன்னும் பல சவால்களுடன் இன்னுமொரு ஆண்டிற்குள் நுழைந்துள்ளோம்.

இனம், மதம், ஜாதி, குலம் என்ற வேறுபாடின்றி இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான இயற்கையின் ஆசீர்வாதங்களை இந்தத் தைப்பொங்கள் தினத்தில் பெற்று உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதிய பயணத்திலும் புதிய மாற்றத்திலும் இணைந்து கொள்ளுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை இத்தருணத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

– என்று உள்ளது.

# உலக மக்களுக்கு உணவளிக்கும் விவசாயி வாழ்வு செழுமை பெறட்டும்



இந்தத் தைத் திருநாளில் உலக மக்களுக்கு உணவளிக்கும் உன்னத பணியை ஆற்றி வரும் விவசாயப் பெரு மக்களுடைய வாழ்வில் செழுமை உண்டாக வேண்டும்.

உலகலாவிய ரீதியாக உணவுப்பொருள்களுக்கு பாரிய தேவைப்பாடு நிலவி வருகிறது. இந்த நிலையில் எமது நாட்டினுடைய விவசாயிகள் பல்வேறுபட்ட காரணங்களால் இன்று பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எமது விவசாயிகள் கடந்த காலத்தில் உரத் தட்டுப்பாடு, விவசாய இரசாயனத் தட்டுப்பாடு என பாரிய நெருக்கடி நிலைமையிலும் கூட அவர்கள் உழைப்பைக் கைவிடவில்லை. அவர்களுடைய கடின உழைப்பே இன்றும் எம்மை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

இயற்கை விவசாயமே நோய் நொடியற்ற நிலையான வாழ்வுக்கு வித்திடும் என்ற உண்மையை அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள் எம் மூதாதையர்கள்.

ஆனால் நாம் கால ஓட்டத்தால் எம் மூதாதையர்கள் காட்டிய இயற்கையான வழிகளில் இருந்து சற்று விலகி விட்டோம். அந்தத் தவறை உணர்ந்து மீண்டும் இயற்கை விவசாயத்தைக் கையிலெடுத்து நோய் நொடியற்ற ஆரோக்கியமான எதிர்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இந்தத் தைப்பொங்கல் தினத்தில் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

தைப்பொங்கல் தமிழ் மக்களுடையதும் விவசாயிகளதும் பெருமைகளை பறைசாற்றும் பாரம்பரிய பண்டிகை.

நன்றிக்கடன் என்பது தமிழ் மக்களுடைய வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த விடயம். அந்த விதத்தில் இயற்கைக்கு நன்றி கூறும் இந்நாளில் ஒவ்வொரு விவசாய மக்களுடையதும் வாழ்விலும் செழுமை உண்டாக இயற்கையும் சூரிய பகவானும் அருள் புரிய வேண்டும்.

இன்று தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது தைப்பொங்கல் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகிறேன்.

**அங்கஜன் இராமநாதன்,**
**யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்,**
**நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர்.**

# தைத்திருநாள் சிறப்பிதழ்

# நன்றி பகரும் பொங்கல் பண்டிகை!



பொங்கல் என்பது விவசாயத்துக்கு மிகவும் இன்றியமையாத சூரிய பகவானுக்கு நன்றி சொல்லும் விதமாக ஏற்படுத்தப்பட்டது. அதனால் பொங்கலன்று வீட்டு வாயிலில் அல்லது பூஜை அறைகளில் சூரியனின் வடிவத்தைக் கோலமாக வரைவது நல்லது.

சூரியனுக்குப் பொங்கல் நிவேதிக்கப்படும் என்பதாலும் கண்ணால் நம்மால் காணமுடிந்த கடவுள் சூரியன் என்பதாலும் வீட்டு வாயில்களில் சூரியனின் கண் பார்வையிலேயே பொங்கலிடும் வழக்கம் இன்றும்கூட கிராமப்புறங்களில் அனுசரிக்கப்படுகின்றன.

நகரத்தில் இருப்பவர்கள் பொங்கல் செய்து அதனை சூரியன் கண்ணில் படும் இடங்களான பால்கனி அல்லது மொட்டை மாடியில் கோலமிட்டு மற்ற பொருள்களையும் வைத்து சூரியனுக்கு சர்க்கரைப் பொங்கலை நிவேதனம் செய்யலாம்.

வெறும் பொங்கல் மட்டுமே நிவேதனப் பொருள் அல்ல. ஒரு முறத்தில் பூசணிக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், கிழங்கு வகைகள், பனங்கிழங்கு, கரும்பு போன்ற பொருள்களையும் வைத்து நிவேதனம் செய்ய வேண்டும். முறத்தில் வைத்த காய்கறிகளைக் கொண்டு அன்று சமையல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் சூரியனின் அருளைப் பெற்று ஆண்டு மழுவதும் பலமும், நலமும் பெற்று நலமாக வாழலாம் என்பது ஐதிகம்.

தை மாதப்பிறப்பே பொங்கல் என்று சிறப்பிக்கப்படுகிறது. அன்று சூரியன் மிகச் சரியாக மகர ராசியில் பிரவேசிக்கும் நேரத்தை அனுசரித்து பொங்கல் பானை வைப்பது வழக்கம்.

பானையின் கழுத்தில் மஞ்சள் குலை, சிறிய கரும்பு துண்டு ஆகியவற்றைக் கட்டி பானையில் புதிய அரிசியைப் போட்டு சிறிது பாலும் ஊற்றி பொங்கலிட வேண்டும். பானையில் இருந்து பாலும், அரிசியும் கலந்த நீர் பொங்கி வழிவது மிகவும் நல்ல சகுனமாகவும், வளத்துக்கு அறிகுறியாகவும் கருதப்படுகிறது.

எந்தத் திசையை நோக்கிப் பொங்கி வழிந்தது என்பதை வைத்து அந்த ஆண்டுக்கான பலனைச் சொல்பவர்களும் உள்ளனர். பொதுவாகக் கிழக்கு திசை நோக்கி பொங்கி வழிதல் மிகவும் சுபமாகக் கருதப்படுகிறது. அதனால்தான், பொங்கலன்று ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பால் பொங்கியதா எனக் கேட்கும் வழக்கமும் உருவாயிற்று.

### போகிப் பொங்கல்

தை மாதப்பிறப்புக்கு முந்தைய நாளே போகி என்று அழைக்கப்படுகிறது. இந்திரனுக்கு போகி என்று ஒரு பெயருண்டு. மழை, மேகம், காற்று போன்றவைகளுக்கு இந்திரனே தலைவன் என்பதால் முதல் நாள் இந்திரனுக்கு நன்றி சொல்லும் விழாவகக் கொண்டாடப்படுகிறது.

அன்றே வீட்டு வாசல்களில் அழகான மாக்கோலம் வரைந்து தேவர்கள் தலைவனுக்க மரியாதை செய்வார்கள். அறுவடைக் காலம் என்பதால் அந்த ஆண்டும் நெல்லும், பருத்தியும், கடலையும் வீட்டை நிறைத்திருக்க வேண்டும் என்பதற்காக பழைய பொருள்களைக் களைந்து புதிய அறுவடைப் பொருள்களுக்கு இடம் கொடுப்பார்கள்.

நம் மனதில் உள்ள பழைய எண்ணங்களான பொறாமை, கோபம், பேராசை போன்றவற்றை நெருப்பிலிட்டுப் பொசுக்கி, புதிய மனிதர்களாக நாம் மாறவேண்டும் என்பதே இதன் தத்துவம். இதனை உணர்த்தும் வகையில் பழைய பொருள்களைத் தீயிலிட்டுக் கொளுத்தி அதனைச் சுற்றி சிறுவர், சிறுமியர் ஆடிப்பாடி மகிழ்வார்கள்.

வீட்டைச் சுத்தப்படுத்துவது, வீட்டுக்கு வெள்ளை அடிப்பதும் போன்றவற்றை போகியன்று செய்தால் மிகவும் நல்லது.

மறுநாள் பொங்கலை வரவேற்கும் பொருட்டு வீட்டின் வாசலில் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கலாம். மஞ்சள் அல்லது சந்தனத்தால் வீட்டு வாசற்படிகளில் பொட்டு வைத்து வழிபடலாம். அப்படிச் செய்வதால் மகாலட்சுமி அன்னை நம் வீட்டை தேடி வருவாள் என்பது ஐதிகம்.

### மாட்டுப் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்குப் பின்னால் சுவையான புராணக் கதை ஒன்று இருக்கிறது. ஒருமுறை சிவபெருமான். தனது பூத கணத்தில் ஒருவனான பசவன் என்பவனை அழைத்து, உலக மக்களிடம் வாரம் ஒருமுறை உணவு உண்ண வேண்டும். தினமும் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும் என்று அறிவித்து வரச் சொன்னார்.

ஆனால் பசவனோ தினமும் உண்ண வேண்டும், வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி விட்டான். இதனால் கோபம் கொண்டு சிவபெருமான், பசவனுக்கு சாபம் கொடுத்து விட்டார். அது என்ன தெரியுமா? ‘உன்னால் மக்களுக்கு அதிக உணவின் அவசியம் ஏற்பட்டு விட்டது. ஆகையால் நீ எருதாகவும் உன் மனைவி பசுவாகவும், பிறந்து நிரந்தரமாக பூமியில் வசிப்பாய்!. மக்களுக்கு உணவுப் பொருளை உற்பத்தி செய்ய நீ கடுமையாக உழைக்க வேண்டும்’ என்று சொல்லிவிட்டார்.

வருத்தத்தில் ஆழ்ந்தான் பசுவன், இறைவனைப் பிரிந்து வாழவேண்டுமே என்று அவன் மனம் வெம்பியது. அவனது நிலை கண்ட சிவபெருமான். மனம் இரங்கினார். ‘கவலை வேண்டாம் பசவா! ஆண்டுக்கொரு முறை மக்கள் உனக்கு நன்றி செலுத்துவார்கள். சுவையான உணவுப் பொருள்கள் அளித்து உன்னை அலங்

தொடர்ச்சி ▼

# தைத்திருநாள் சிறப்பிதழ்



## நன்றி பகரும் பொங்கல் பண்டிகை!

தொடர்ச்சி▲

கரித்து மரியாதை செலுத்துவார்கள். உன் மனைவியான பசுவுக்கு எப்போதும் பூஜைகள் செய்வார்கள். அப்படிச் செய்பவர்களுக்கு நான் எல்லா வளமும், வற்றாத செல்வமும் அளிப் பேன். அதோடு உமையன்னையும் நானும் உங்களை நாடி வந்து நலன் விசாரிப்போம்' என்றார்.

அதனால் ஆறுதல் அடைந்த பசுவன் அப்போதே தன் மனைவியுடன் காளை மாடா கவும், பசுவாகவும் பூமியில் பிறந்தான். அவனுக்கு சிவபெருமான் அளித்த வாக்கின்படியேதான் இன்றுவரை மாட்டுப் பொங்கல் கொண்டாடப் படுகிறது.

மாடு இல்லாதவர்கள் கோசாலைக்கோ மாடு வைத்திருப்பவர்கள் வீட்டுக்கோ சென்று பசுவுக்குப் பூஜை செய்தால் இறைவன் மனம் மகிழ்ந்து, நம் வாழ்வில் மங்களம் நிலைக்கச் செய்வார்.

காணும் பொங்கல்

சகோதரர்களைப் போற்றும் பொங்கல் இது. இதையே காணும்பொங்கல் என்றும் அழைப் பார்கள். சகோதரிகள் தங்களுடன் பிறந்த சகோ தரர்கள் நன்றாக வாழ வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டு செய்யும் பொங்கல் இது.

உணவை மஞ்சள் இலையில் சிறு சிறு உருண்டைகளாக வைத்து வேண்டுவார்கள். 'காக்காய்க்கும் குருவிக்கும் கனுப்பிடி வைத்தேன். காக்கைக் கூட்டம் கலையாமல் இருப்பது போல என் கூட்டமும் கலையாமல் இருக்கவேண்டும்' என்று வேண்டிக் கொள்வார்கள். பிறகு அந்த உணவைக் காக்கைகளும் மற்ற பறவைகளும் புசிக்கும்படி அழைப்பார்கள்.

மற்ற உயிரினங்களிடமும் அன்பு காட்டும் உயரிய நம் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் செயல் இது. அப்படிச் செய்தால் புகுந்த வீட்டுக்கும், பிறந்த வீட்டுக்கும் நல்லுறவு நீடிக்கும் என்றும், சகோதரர்களுக்கு நீண்ட ஆயுளும், அமைதியான வாழ்க்கையும் அமையும் என்பது நம்பிக்கை.

அன்று சகோதரிகள் தங்கள் உடன் பிறந்த வர்களை வீட்டுக்கு அழைத்து சிறப்பித்து அவர்களுக்குப் பிடித்த உணவு வகைகளைச் செய்து அன்போடு உபசரிக்க வேண்டும். அப்படி சகோதரிகள் வீட்டுக்குச் செல்லும் சகோதரர்கள் கனுப்பிடி என்றழைக்கப்படும் சீர் கொண்டு செல்ல வேண்டும். அப்படிச் செய்வதால் சகோதரியின் மாங்கல்யம் நிலைக்கும்.

உடன் பிறந்தவர்களிடையே நல்லுறவு நீடிக் கும் என்பது ஐதிகம். அன்று மற்ற உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று பார்ப்பதும் வழக்கத்தில் உள்ளது.

உறவினர்கள், உடன் பிறந்தவர்கள் என்று அனைவரோடும் ஒற்றுமையோடும் நல்லிணக்கத்தோடும் வாழவேண்டும் என்று வேண்டிக் கொள்வோம். இல்லத்தில் பொங்கல் பொங்கட்டும். மனதில் மகிழ்ச்சி தங்கட்டும்!!

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு.**

## மக்கள் வாழ்வில் மாற்றம் தரட்டும் பொங்கல்!

தைத் திருநாளாம் தைப்பொங்கலை கோலாகலமாக கொண்டாடும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத் திருநாள் அன்று மகர சங்கராத்தியம் கொண்டா டப்படுகின்றது. சூரியனுடைய வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத் தியம் என்று சொல்லுகின்றனர்.

எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத் தைப் பொங்கல் அமைகின்றது. பொங்கல் பொங்கி வருகின்றபோது நாம் அனைவரும் சௌபாக் கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்கின்றது.

பொங்கல் பலவிதமானவை. ஹோலிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என பல விதமான பொங் கல்களைக் கொண்டாடுகின்றோம்.

எனவே இந்தப் பொங்கல் தினத்தில் தொழிலா ளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்க பூர்வ



மான நடவடிக்கைகளையும் அழுத்தங்களையும் வெற்றிபெறச் செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு எல்லா வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

**மருதபாண்டி ரமேஸ்வரன்,**
**நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**
**தவிசாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.**

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# பொங்கல் தமிழர் வாழ்வில் பொங்குமா?



இயற்கையோடு இயைந்து இயற்கைக்கு உளப்பூர்வ நன்றி பாராட்டி – உழைப்பின் உன்னதத்தைப் போற்றுவது தமிழர் கொண்டாடும் தைப் பொங்கல் விழாவின் உன்னத நோக்கமாகும்.

அப்படிப்பட்ட புனித நாளில் தமிழர் வாழ்வில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வானது இந்த வருடப் பொங்கலுடனாவது எட்டப்பட வேண்டும்.

உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி இத்தரணி எங்கும் பொங்கவேண்டும்.

பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

சூரியனை வழிபடுவதால் உலகில் அடைய முடியாதவையே கிடையாது. வேதம் கதிரவனைப் பலவாறும் புகழ்கிறது. 'நாஸ்திகர்களாலும் இல்லை என்று கூற முடியாத கடவுள் சூரிய பகவானே' என்பதை வேதம் கூறுகிறது.

அப்படிப்பட்ட சூரிய பகவானுக்கு நன்றி கூறுகின்ற இந்த நாளில் சகலரது வாழ்விலும் நன்றியுணர்வு ஏற்படவேண்டும்.

**கே.ஜெயசிறில்,**
**முன்னாள் தவிசாளர்,**
**காரைதீவு பிரதேச சபை.**

அல்டி எலெக்ரோனிக்ஸ்
யாழ். நகரில் கண்காணிப்புக் கமராக்கள் விற்பனையில்
நம்பிக்கையான நிறுவனம்


அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல்
நல்வாழ்த்துகள்






HIKVISION
ALDI ELECTRONICS
68, Stanley road, Jaffna
021 222 2676 / 076 227 7775
aldielec@yahoo.com




அனைவருக்கும் இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்
Ruhbins
Hospital
RUHBINS HOSPITAL (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94773123456


வினோ
நகைப்பூங்கா
Vino Nakai Poonka
அனைவருக்கும்
இனிய தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்
வினோ நகைப் பூங்கா
VINO NAGAI POONGA
இல.177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
No.177, Kasthuriyar Road, Jaffna.
Tp-021 222 5394. 021 222 9494. 074 209 9494
இதுவரை காலமும் 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது புதிய முகவரியில் (வின்சர் தியேட்டர் முன்பாக) இயங்கிவருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
உரிமையாளர்: ச.புவிச்சந்திரன்
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. : 021 222 5394, 021 222 9494 , 074 209 9494